# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 190/நகராட்சி/2018**

**நாள் : 22/11/2018**

**ஸ்ரீபெருமாள் நகர் நலச் சங்கம்,**
**சென்னை – 600 117.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**பல்லவபுரம் நகராட்சி,**
**சென்னை – 600 044.** – **எதிர் மனுதாரர்**

சென்னை, பழைய பல்லவபுரம், பெருமாள் நகர், 8–வது குறுக்குத் தெரு, 3/121 எண்ணிட்ட முகவரியில் செயல்பட்டுவரும் ஸ்ரீபெருமாள் நகர் நலச் சங்கச் செயலாளர் அவர்களின் 21.08.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 190/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக நகராட்சி ஆணையர் சமர்ப்பித்த அறிக்கை மற்றும் விசாரணையின்போது நலச் சங்கத்தினர் அளித்த வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, பழைய பல்லவபுரம், பெருமாள் நகர், 8–வது குறுக்குத் தெரு, 3/121 எண்ணிட்ட முகவரியில் செயல்பட்டுவரும் ஸ்ரீபெருமாள் நகர் நலச் சங்கத்தின் செயலர், தனது முறையீட்டு மனுவில் பல்லவபுரம் நகராட்சியின் 17–வது வார்டு மக்களுக்கு 2011–12–ஆம் ஆண்டின் அரையாண்டிலிருந்து சொத்து வரியை உயர்த்தி அறிவிப்பு வழங்கப்பட்டதென்றும், பின்னர் அதையும் மாற்றி 2017–18–ஆம் ஆண்டின் 2–வது அரையாண்டிலிருந்து உயர்த்தி மறு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளதுடன், அவ்வறிவிப்பில் உயர்த்தப்பட்ட வரிவிகிதங்கள் 71 சதவிகிதம் முதல் 462 சதவிகிதம் வரை உள்ளன என்று குறிப்பிட்டு, 12 எண்ணிக்கையிலான சொத்து வரி மதிப்பீடு விவரங்களைக் குறிப்பிட்டுள்ளார். மேலும், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கே.கே. நகர், திருவான்மியூர், தி.நகர் மற்றும் மேற்கு அண்ணாநகர் பகுதிகளில் உயர்த்தப்பட்ட சொத்துவரி விகிதம் 50 சதவிகிதம் முதல் 53 சதவிகிதம் வரைதான் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 24.10.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 26.07.2018 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.76–இல் வணிக நோக்கல்லாத கட்டிடங்களுக்கு 50 சதவிகிதத்திற்கு மிகாமல் திருத்திய வரி விதிக்கப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், உயர்த்தப்பட்ட சொத்துவரி விதிப்பு 2018–19–ஆம் ஆண்டு நடப்பு அரையாண்டிலிருந்து நடைமுறைக்கு வர வேண்டுமெனவும், ஆனால் நகராட்சி ஆணையர் தனது சுற்றறிக்கையில், 2017–18–ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டிலிருந்து புதிதாக உயர்த்தப்பட்ட சொத்துவரியினை செலுத்துமாறு அறிவிப்பு வழங்கியுள்ளார் என்றும் விசாரணையின்போது தெரிவித்தார். எனவே, 50 சதவிகிதத்திற்கு மிகாமல் சொத்துவரி திருத்தி அமைத்து 2018–19–ஆம் ஆண்டிலிருந்து செலுத்த வகை செய்யுமாறும் விசாரணையின்போது கேட்டுக்கொண்டார்.

3. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. 12.07.2017 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு செயலர் அவர்கள் மேற்கொண்ட ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு, குறைவாக வரி விதிப்பு செய்யப்பட்ட கட்டடங்கள் மற்றும் சொத்துவரி விதிப்பு செய்யப்படாத கட்டடங்களை கண்டறிய குழு ஒன்று அமைத்து தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, குறைவாக சொத்துவரி விதிக்கப்பட்டுள்ள 12,051 சொத்து வரி விதிப்புக் கட்டடங்கள் கண்டறியப்பட்டு சதுர அடி அடிப்படையில் வரி நிர்ணயம் செய்யப்பட்டது என்று தெரிவித்துள்ளார். மேலும், சொத்துவரி விதிக்கப்படாத 1277 கட்டடங்கள் கண்டறியப்பட்டன என்றும் குறிப்பிட்டுள்ளார். மேற்குறிப்பிட்ட சொத்துவரி விதிப்பு கட்டடங்களுக்கு 13 அரை ஆண்டுகளுக்கு வரி விதிப்பு செய்யப்பட்டதை இரத்து செய்து 01.10.2017 முதலில் இருந்து மட்டுமே சொத்துவரி மறு நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், "for building assessed and those which were subject to revision for 01.04.2017 to 31.03.2018," no revision is required என 20.08.2018 நாளிட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளார். எனவே, மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்தபடி 01.04.2018–ஆம் தேதி முதல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளும்பொழுது, மேற்குறிப்பிட்ட சொத்து வரி மறு நிர்ணயம் செய்யப்பட்ட வரி விதிப்புகளுக்கு சொத்துவரி பொதுச் சீராய்வு செய்ய வேண்டியதில்லை எனவும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்ட திருத்தப்பட்ட சொத்துவரி மதிப்பீடுகள் அனைத்தும் 01.04.2018–க்கு முன்பாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, நகராட்சி நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கைக்கு மாறாக எந்தவொரு ஆணையும் இம்முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்க இயலாது. மேலும், சொத்துவரி விதிப்பு சம்பந்தமாக மேல்முறையீடு செய்வதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறை குறித்து, 15.04.2005 நாளிட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கை எண். 7699/2005/R1-இல் "....appeal can be made to the Taxation Appeal Committee, as per Rule 23 of Schedule IV of the Tamil Nadu District Municipality Act, 1920, only after the payment amount fixed on the revision petition within the prescribed time limit of 15 days from the service of the notice...." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதையும் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது. எனவே, 2014–ஆம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (4) (c)–இன் படி முறையீடு செய்துள்ளவருக்கு பிற தீர்வுகள் கிடைக்கத் தக்கதாக இருக்கும் போது மற்றும் வழக்கில் சூழ்நிலைகளின் நோக்கில் அத்தகைய தீர்வுகளைப் பெறுவது முறையீடு செய்துள்ளவருக்கு

அதிகப்படியான நலனைத் தரக்கூடியதாக இருக்குமென இம்முறைமன்ற நடுவம் கருதுவதால், மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள வழிகாட்டுதல்களின்படி செயல்படுமாறு இந்நேர்வின் முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, **நவம்பர்** திங்கள், **22–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

1. **செயலாளர்,**
   **ஸ்ரீபெருமாள் நகர் நலவாழ்வு சங்கம்,**
   **எண்.3/121, 8–வது குறுக்குத் தெரு,**
   **பெருமாள் நகர்,**
   **பழைய பல்லவபுரம்,**
   **சென்னை – 117.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **பல்லவபுரம் நகராட்சி,**
   **குரோம்பேட்டை,**
   **சென்னை – 600 044.**

**நகல் :** முறைமன்ற நடுவரின் **நேர்முக எழுத்தர்**
பிரிவு அலுவலர் **(நிர்வாகம்)**
பேரூராட்சி பிரிவு – **3**
**இ.கோ. / உதிரி**